உ

திருவருள் துணை

இந்தியாவும் உலக சமாதானமும்

மதுரை ஆதீனகர்த்தர்

...ர் தவயோக ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர

...பந்த தேசிக பரமாச்சாரியசுவாமிகள்

உ

திருவருள் துணை

உயிர்களும், கடவுளும்

1. உயிர்கள் எண்ணில்லாதன. என்றும் உள்ளன. உயிர்களுக்கு உருவம் கிடையாது. உருவம் இல்லாத உயிர்கள், உருவமுள்ள உடல்களைச் செயற்கையால் இயக்கும் சக்தியுடையன. உயிர்கள் இயற்கை அறிவுடையன அல்ல. உயிர்கள் பிறர் அறிவிக்க அறியும் செயற்கை அறிவு உடையன. உயிர்கள் இல்லாத உடல்கள் வளர்வதில்லை. தொழிற்படுவதில்லை உயிர்களும் உடல்களின் உதவியின்றி தொழிற்படுவதில்லை. உயிர்கள் இல்லாத உடல்கள் அறிவற்ற நாற்றமுடைய கட்டைகளே. உருவமில்லாத உயிர்கள் உருவமுள்ள உடல்களில் தங்கியிருக்கின்றன. உயிர்கள் விரும்பிய படி உடல்களில் தங்கியிருக்கவும் முடிவதில்லை. உடல்களை உண்டாக்கிக்கொள்ளவும் முடிவதில்லை. பெற்றோரும் உடல்களுக்கு உயிரைக் கொடுக்கவும், பிரிக்கவும் முடிவதில்லை. அவர்கள் விரும்பியபடி உடல்களை உண்டாக்கவும் முடிவதில்லை. ஆனதால் உடல்களை உண்டாக்கவும், உடல்களில் உயிர்களைப் புகுக்கவும் பிரிக்கவும் செய்கிற ஒருவர் உண்டு என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

2. அவ்வாறு செய்கிறவரையே கடவுள் என்று சொல்லுகின்றோம். கடவுள் உயிர்களைப் படைக்கவில்லை; கடவுள் உடல்களையே படைக்கிறார் கடவுளால் படைக்கப்படாத உயிர்களுக்குரிய அறிவின்மை (அஞ்ஞானம்) விருப்பு, வெறுப்பு (இச்சை) நல்ல பண்பு, தீய பண்பு. (குணம்) ஆகியவற்றைக் கடவுள் கொடுக்கவும் இல்லை,

[கடைசி அட்டையின் உள்பக்கம் பார்க்க]

உ

திருவருள் துணை

இந்தியாவும் உலக சமாதானமும்

1. கடவுள் மக்களுக்குச் செய்துவரும் பேருபகாரம்:

1. உலகத்திலே நாம் நமக்கு வேண்டிய உடலை நாமே எடுத்துக்கொள்ளமுடிவதில்லை. அப்படி முடியுமானால் ஒவ்வொருவரும் அழகு சுந்தரர்களாகவும், அழகு சுந்தரிகளாகவும் உதித்திருப்போம்.

2. ஒரு உரோமத்தைக்கூட நம்மால் உண்டாக்க முடிவதில்லை. தலையில் கறுப்பாக இருக்கிற உரோமத்தை நாற்பது வயதிற்கு மேலும் கறுப்பாகவே வைத்துக்கொள்ள முடிவதில்லை. பிறந்து சில மாதங்கள் கழித்து முளைக்கிற பற்களை, குறிப்பிட்ட சில வயதிற்கு மேலும் வைத்திருக்க முடிவதில்லை.

3. நாம் நம்முடைய விருட்பத்தின்படி நம்முடைய பெற்றோர்களுக்குப் பிள்ளைகளாகப் பிறக்கவில்லை. நம்முடைய விருப்பம்போல் பிறக்க முடியுமானால் நாம் எல்லோரும் அரசர்கள் வீட்டிலேயே பிறக்க முயற்சித்திருப்போம்.

4. பெற்றோர்களும் தங்களது விருப்பம்போல் ஆணாகவோ, பெண்ணாகவோ, அழகாகவோ பிள்ளைகளைப் பெற்றெடுக்க முடிவதில்லை. ஆண் பிள்ளை இல்லையே என்றும், பெண் பிள்ளை இல்லையே என்றும், ஒரு பிள்ளையும் இல்லையே என்றும் ஏங்கும் பெற்றோரிடம் இதைக் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம். எல்லா நவீன வசதிகளும் பெற்றிருந்த ஆருவது ஜார்ஜ் மன்னரும், ஜவஹர்லால் நேருஜியும் ஆகிய இருவரும் ஒரு ஆண் குழந்தையையாவது பெற்றெடுக்கவில்லை என்ற ஒன்றே இதற்குப் போதிய சான்றாகும்.

5. நம்முடைய பெற்றோர் நமக்கு அவயவங்களைக் கொடுக்க சக்தியற்றவர்களாக இருக்கிறார்கள். சக்தி உடையவர்களாகில் கூன், குருடு, செவிடு, ஊமை, நொண்டி, பேடு, நெட்டை, குட்டை, நிற வேற்றுமை முதலியன ஏற்பட முடியாது.

6 மேலும் பிறப்பு நம்முடைய விருப்பத்திலும், பெற்றோர்களுடைய விருப்பத்திலும் இல்லாது போனாலும், இவ்வுலகத்தில் நாம் வாழ்ந்திருப்பது, நம்முடைய விருப்பத்தில் இருக்கிறதா என்று பார்த்தால் அதுவும் இல்லை. இறப்பு எந்த நிமிஷம், எப்படி, எங்கு ஏற்படும் என்று நமக்கும் தெரியவில்லை, பெற்றோருக்கும் தெரியவில்லை. டாக்டர்களுக்கும் தெரியவில்லை. நம்முடைய வாழ்நாளும், சாநாளும் கடவுளது தீர்ப்பிற்குள் இருக்கின்றன.

நமக்கு ஆறறிவுள்ள மனிட உடல் தந்தவரும், நாம் வாழ்வதற்கு இன்றியமையாத உணவுப் பொருள் களைத் தந்தவரும், அவை உண்டாவதற்கு வேண்டிய நிலம், நீர், நெருபபு (சூரியன்), காற்று, ஆகாயம் முதலிய பூதங்களைத் தந்தவரும் கருணாநிதியாகிய கடவுளேயாவர் நம்மை வாழ்விக்கின்ற பேருபகாரி யாகவும், நம்மைப் பிறக்கவும், வாழவும், இறக்கவும் செய்து ஆளுகின்ற சர்வாதிகாரியாகவும், இவ்வுலகி லுள்ள அரசர்களையும் ஆட்சியாளர்களையும் ஆட்சி யாளர்களாக நியமிக்கவும், நீக்கவும் செய்கின்ற ராஜாதி ராஜனாகவும் திகழ்கின்றவர் சர்வ வல்லமையும் உள்ள கடவுளேயாவர்.

ஒரு சிறைச்சாலைக்குள் இருக்கின்ற கைதிகளைக் கண்காணித்து ஆட்சி செலுத்தும் ஜெயில் அதிகாரி களை, சிறைச்சாலைக்கு வெளியில் இருக்கும் அரசாங்கமே தீர்மானித்து நியமித்திருக்கிறது அல்லவா! அது போலவே இப்பூவுலகமாகிய சிறைச்சாலைக்குள் வந் திருக்கும் பூவுலக மக்களைக் கண்காணித்து ஆட்சி செலுத்தும் ஆட்சியாளர்களை நியமிக்கின்ற அரசாங்க மும் இப்பூவுலகிற்கு வெளியேயுள்ள ஆண்டவனது நிரந்தரமான அரசாங்கமேயாகும்.

சிறு அதிகாரமும், சில வருஷ வாழ்வும் உடைய அதிகாரிகளது தயவை நாடி நல்வாழ்வு வாழலாம்

என்று கருதுகின்றனர், அருளாளர் அல்லாத எல்லா மனிதரும். அவ்வாறு கருதுகின்ற மனிதர்கள் சர்வ வல்லமையையும், நமது நல்வாழ்விற்குரிய சகல அதிகாரங்களையும் தன்னிடம் வைத்துக்கொண்டு அவற்றை அமுல் நடத்தி, நமக்குப் பேருபகாரம் செய்து நம்மை வாழ்வித்து வரும் பேரருளாளனுகிய கடவுளின் தயவை நாடி சகல நன்மைகளையும் பெருதிருக்கின்றனர். அதற்கு மூலகாரணம், அவ்விதப் பேருபகாரம் செய்கின்ற, நம் வாழ்முதலாகிய கடவுள் ஒருவர் இருக்கிருர் என்ற உணர்வும் அவர் தோன்ருத் துணையாக இருந்து நமக்குப் பேருபகாரம் செய்து வருகிருர் என்ற உணர்வும் இல்லாத அஞ்ஞானமேயாகும். கடவுளது உருவத்திருமேனி சாதாரண மக்களது கண்களுக்குத் தெரியாமலும், அருளாளர்களது கண்களுக்குக் காணக்கூடியதாகவும் இருக்கின்றது. அது இறந்தவர்கள் சூக்கும சரீரம், யாதனு சரீரம், பிராணமய கோசம் என்று சொல்லப்பெறுகின்ற பாரமில்லாத ஆவி உடலோடு வசிக்கும்பொழுது அவர்கள் ஒரு சிலர் கண்களுக்கு மட்டும் காணக்கூடியவர்களாகவும் மற்ற சாமானியர் கண்களுக்குக் காணக்கூடாதவர்களாகவும் இருப்பதுபோலவேயாகும். அவ்வாறு காணக்கூடிய சக்தி உடையவர்களை ஆங்கிலத்தில் (Clair Voyant) க்ளேயர் வாயன்ட் என்று சொல்லுவார்கள். இதன் விபரம் நாம் எழுதியிருக்கும்

" இறந்தவர்கள் வாழும் நிலையும், பேசும் முறையும் " என்ற புத்தகத்தில் தக்க ஆதாரங்களுடன் கூறப் பெற்றிருக்கிறது.

2. கடவுள் யாரையும், எங்கும், எம்மொழி பேசுகின்றவர்களாகவும் பிறக்கவைக்கும் வல்லமையுடையவர்

அவ்வாறு கடவுள் மக்களது கண்களுக்குத் தெரியாதவராக இருந்தாலும் அவர் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு தலையெழுத்து எழுதி, ஒரு நியாயத் தீர்ப்புப் போட்டு இப்பூவுலகிற்கு அனுப்பி அவர்களை ஆட்சி செலுத்திவருகிறார் என்ற உண்மையை நிரூபிக்க எம் மதத்தவரும் மறுக்கமுடியாத முறையில் இந்தியாவி லுள்ள இரேகை சாஸ்திரம் அல்லது நாடி சாஸ்திரம் நிரூபணம் தருகின்றது. அதில் ஒருவருடைய கைகளைப் பார்த்து அதிலுள்ள கோடுகளையும், புள்ளிகளையும் கொண்டு அவர் பிறக்கும்பொழுது எந்தெந்த கிரஹம் எந்தெந்த இடத்தில் இருந்தது என்றும், அதனால் அவருடைய பெயரும், ஊரும், பெற்றோரும், படிப்பும், திருமணமும், உத்தியோகமும், மற்றும் இப்பூவுலக வாழ்வும் இன்னவிதமாக இருக்குமென்றும் கூறப்பெறு கின்றது.

காரைக்குடியில் எஸ். ஆர். எஸ். சாரி என்று ஒருவர் இருக்கிறார். அவர் எவருடைய கைரேகைகளை யும் பார்த்து அவர் பிறந்த வருஷம், மாதம், தேதி,

மணி, விநாடி முதலியன கொடுத்து அந்த சமயத்தில் வான மண்டலத்தில் எந்தெந்த கிரஹம் எந்தெந்த இடத்தில் இருந்தது என்ற விபரம் அடங்கிய ஜாதகத்தைச் சரியாகக் கணித்துக் கொடுக்கிறார் யாவரும் சோதித்துப் பார்த்து இதன் உண்மையை உணர்ந்து கொள்ளலாம். நமது கைகளிலுள்ள கோடுகளை வைத்து கிரஹ நிலைகளையும், அதனால் நமது வாழ்க்கை வரலாறுகளையும் சொல்ல முடியுமானால், கைகளில் உள்ள கோடுகள் அத்தனையும் பொருளுடைய எழுத்துக்களாகின்றன என்பது புலனாகும் அல்லவா? பொதுவாக எல்லா எழுத்துக்களுமே வரிவடிவமாகிய கோடுகளால் அமைந்தனவாகத்தானே இருக்கின்றன.

சுருக்கெழுத்தில் (Short-hand) ஒவ்வொரு புள்ளியும், ஒவ்வொரு கோடும் பொருளுடைய எழுத்தாகிறது என்பதை யாவரும் அறிவர். Short-hand தெரியாதவர்கள் ஏதோ கிறுக்கியிருக்கிறது என்று சொல்லுவார்கள். ஆனால் அந்த எழுத்தைத் தெரிந்தவர்கள் மட்டுமே அதனைப் புரிந்து மற்றவர்களும் புரியுமாறு சொல்லவும், எழுதவும் முடியும். அதுபோலவே நமது கைகளிலே இருக்கும் இரேகைகளைச் சாதாரணமானவர்கள் வெறும் கோடு என்று சொல்லுவார்கள். ஆனால் அந்த ரேகை சாஸ்திரத்தை நன்கு உணர்ந்தவர்கள் அதனைத் தாங்களும் புரிந்து மற்றவர்களும் புரியுமாறு சொல்லுவார்கள். நாம் பிறக்குமுன்னரே நமது தந்தை

யார்து உடம்பில் வித்தாக வரும் முன்னரேயே இந்த ரேகைகளுக்குரிய தீர்ப்பும், அச்சும் ஆண்டவனுல் கொடுக்கப்பெறுகின்றன. நமது இரேகையைப் பார்த்துப் பிறந்த நேரமும், பெயரும், சொல்லப்பெற்று அவை சரியாக இருக்கிறதென்ருல் நாம் பிறக்குமுன்னரேயே நமக்கு ஆண்டவனுல் நாம் பிறக்கவேண்டிய நேரமும் பெயரும் தீர்மானிக்கப்பெற்றவையே என்ற உண்மை புலனுகிறதல்லவா ?

இயேசுநாதருக்கும், யோவான்ஸ்நானருக்கும், அவர்களுடைய பெயர்கள், அவர்கள் பிறக்குமுன்னரேயே கடவுளால் தீர்மானிக்கப்பெற்றுத் தேவ தூதர் மூலம் இவ்வுலகிலுள்ளவர்களுக்கு அறிவிக்கப்பெற்றவையாகும். இவ்விதமே உலகத்தில் பிறந்திருக்கிற மனிதர்கள் எல்லோருக்கும் கடவுள்தான் பெயரிட்டிருக்கிருர் என்ற உண்மை பெரும்பாலருக்குத் தெரியாது. உலகத்திலே மனிதர்களுக்கு மட்டுமே தனித்தனிப் பெயர் கொடுக்கப்பெற்றிருக்கிறது. இதனை உணர்த்தவே கிறிஸ்தவ வேத நூலாகிய பைபிளில் பிரசங்கி ஆகமம் 6-ஆம் அதிகாரம் வசனம் 10 கீழ்வருமாறு கூறுகிறது. “இருக்கிறவன் எவனும் தோன்றுமுன்னமே பேரிடப்பெற்றிருக்கிருன். அவன் மனுஷன் என்று தெரிந்திருக்கிறது........” பெற்ருேர்கள் குழந்தை

கள் பிறந்தபின் ஆணு, பெண்ணு என்று பார்த்துத் தானே பெயர் இட முடியும். ஆனுல் கடவுளுக்கு, பிறக்கவேண்டிய குழந்தை ஆணு, பெண்ணு என்பது முன்னமேயே தெரியுமாதலால் அதற்குரிய பெயரையும், தலையெழுத்தையும் முன்னரேயே தீர்மானித்துவிடுகிருர்.

இந்த உண்மையை நன்ருக உணர்ந்திருந்த நமது ரிஷிகள் இரேகை சாஸ்திரம் என்ற ஒன்றை அருளியிருக்கிருர்கள். அதற்கு நாடி சாஸ்திரம் என்ற பெயரும் உண்டு. அப்படிப்பட்ட நாடி சாஸ்திரங்கள் பனை ஓலைகளில் எழுதிவைக்கப்பெற்று, தஞ்சை சரஸ்வதி மஹாலிலிருந்து பலபேருடைய கைகளில் சிக்கியிருக்கின்றன. அவ்வாறு கை இரேகைகளைப் பார்த்து, புள்ளி விபரம் தெரிந்து, அதைக்கொண்டு அதற்குரிய ஏட்டை எடுத்து, அதில் அந்த இரேகையுடைய நபருடைய பெயர், ஊர், குடும்பநிலை, படிப்பு, தொழில், திருமணம், பணம், ஆயுள் முதலிய தலையெழுத்தை வாசித்துக் காட்டுவார்கள். அவரவருடைய அனுபவமும், வாழ்க்கை நிலையும் அதற்கு ஒத்திருப்பதை அவரவரே உணர்நதுகொள்ளவும், அதனுல் நாம் பிறக்குமுன்னரே போடப்பெற்ற கடவுளது தீர்ப்பின்படியே ஒவ்வொருவரும் பிறந்திருக்கிருேம் என்ற பேருண்மையை உணர்ந்துகொள்ளவும் முடிகிறது

இந்த உண்மை இந்துக்களுக்கு மட்டுமல்ல; உலகில் மனிதராகப் பிறந்திருக்கிற எல்லோருக்கும் ஏற்பட்டுள்ள பொது உண்மை. இந்த உண்மையை எல்லா மதத்தினரும், சோதித்துப் பார்த்து ஒத்துக் கொள்ளலாம். பல இந்துக்களேயும், சில கிறிஸ்தவர் களேயும், சில இஸ்லாமியர்களேயும், ஒரு ஆங்கிலேய ரையும் அவ்வாறு சோதித்துப் பார்க்கும்படி நாம் சொல்லி, அவர்களும் போய் தங்களது கை இரேகை களைக் காட்டிச் சரிபார்த்து வந்து இந்தப் பேருண் மையை ஒப்புக்கொண்டு போயிருக்கிருர்கள். அவர் களில் ஒவ்வொருவரது பெயரும் அவரவரது ஏட்டில் கண்டவிதத்தில் இங்கு குறிப்பிடுகிருேம்.

நாகர்கோயில் ஆறுமுக நாவலரது ஏட்டில் அவர் களுக்குப் பெயர் "ஐந்தும் ஒன்றும் வதனமெனப் பெய ரும் சூட்டி" என்றிருந்தது. ஐந்தும் ஒன்றும் ஆறு; வதனம் என்ருல் முகம். ஆறுமுகம் என்று ஆகின்ற தல்லவா? ரோமன் கத்தோலிக்கக் கிறிஸ்தவரது பெயர் ' சாவில் ஆறும் சாவில் ஒன்பதும் இவன்தன் நாமம்" என்றிருந்தது. 'ச' என்ற எழுத்து வரிசையில் ஆருவது எழுத்து 'சூ'; ஒன்பதாவது எழுத்து 'சை' அவரது பெயர் "சூசை". இஸ்லாமியரது பெயர் அப்துல் ரஹ்மான் என்றே வந்தது. ஆங்கிலேயர் பெயர் "ஜான்" என்பது "முழத்தில் பாதி இவன் தன் நாமம்" என்றிருந்தது.

உலகில் யாவரும் அறிந்த, காலம் சென்ற ஸ்ரீ லால்பகதூர் சாஸ்திரி அவர்களுடைய ஜாதகத்தைக் கொண்டு எடுத்த ப்ருகு சம்ஹித என்னும் இரேகை சாஸ்திர ஏட்டிலிருந்து 30—12—1965-ல் பண்டிட் சிவகுமார் டிக்ஷிட் படித்துச் சொன்னதை பங்களூர் ஸ்ரீ பி. வி. ராமன் அவர்கள் தனது 1966 ஏப்ரல் மாதத் திய சோதிடப் பத்திரிகை (The Astrological Magazine Vol. 55 No. 4) 377/380-ம் பக்கங்களில் வெளியிட்டிருக்கிறார். அதன் சுருக்கமாவது:— இந்த இரேகை சாஸ்திர ஆராய்ச்சி சுக்ரா கேள்வி கேட்பதாகவும், ப்ருகு முனிவர் அதற்குப் பதில் செல்வதாகவும் அமைந்திருக்கிறது. அதில் ப்ருகு முனிவர் கூறும் முக்கிய அம்சங்களாவன.

இந்த ஜாதகர் சிவன் உறையும் வாரணாசியில் "சாரதேத்தி பிரசாதேத்தி இல்லத்தில் மத்திய ஆனால் படிப்புள்ள குடும்பத்தில் ஞாயிற்றுக்கிழமையன்று அஸ்வினி நக்ஷத்திரத்தில் கிருஷ்ணபக்ஷத்தில் தனுர் லக்னத்தில் பிறப்பார்.

சிக்கனம், நேர்மை, தாழ்வுடைமை, அஞ்சாமை, கல்வியுடைமை முதலிய இயல்புடைய இவர் ஏழை பணக்காரர் என்ற பேதமின்றிப் பழகுவார். இவரும் இவருடைய மனைவி லலிதாவும் வாழ்விலுள்ள கஷ்ட நஷ்டங்களைப் பொறுத்து வறுமையில் செம்மையாக

வாழ்வார்கள். அரசாங்கத்தில் பல மேலான பதவிகளை, இவர் வகித்தாலும் அதனால் யாதொரு பெருமையும் கொள்ளமாட்டார். பாரத விடுதலைக்காகப் போராடவும், போற்றத்தக்க தியாகமும் செய்வார். அவருக்கு விசுவாசமுள்ள மனைவியும், நான்கு ஆண் குழந்தைகளும், இரண்டு பெண் குழந்தைகளும் அருளப்பெறும்.

அவர் அரசாங்கத்தில் என்னென்ன வேலை பார்ப்பார் என்று கூறிவிட்டு மேலும் கூறுகிறார்.

அவரது அறுபதாவது வயதிலே, அவர் இந்தியாவின் பிரதமராவார். இந்தப் பதவியில் குறுகிய காலத்தில் மிகவும் மேலான கீர்த்தியைப் பெறுவர். பல கஷ்ட நஷ்டங்களுக்கிடையே அண்டை நாட்டானுடைய ஆக்கிரமிப்பை மிகுந்த தைரியத்தோடு முறியடித்து வெற்றிபெறுவார்

62-வது வயது அவருக்கு உடல் நலிவைக் கொடுக்கும். இங்கு அவருடைய முன் பிறப்பைப் பற்றியும், மறு பிறப்பைப் பற்றியும் கூறப்பெறுகின்றது. மந்திரி சபையில் பல மாறுதல்கள் ஏற்படப்போகின்றன. இத்துடன் என் கண்களில் நீர் பெருக இதனை முடிக்கின்றேன். மேற்கொண்டு ஒன்றும் கேட்கவேண்டாம். இனி நடக்கப்போவதைக் குறித்து வருந்துகின்றேன். பாரத நாட்டை ஆசீர்வதிக்கின்றேன். இந்தப் பாரத

தேசம் எவ்விதப் பகைவர்களேயும் ஒடுக்கிவிடும் என்பதற்குமேல் சொல்லுவதற்கு வேறு ஒன்றுமில்லே.

இவற்றிலிருந்து ஒருவர் அரசாங்க பதவிக்கு வருவதும், அது எவ்வளவு காலம் நீடிக்கும் என்பதும், எந்த வயதுவரை அவர் இவ்வுலகில் வாழ்வார் என்பதும் கடவுள் நாம் பிறக்குமுன் போட்ட தீர்ப்பைப் பொறுத்து இருக்கிறதே தவிர நம்முடைய சாமர்த்தியத்திஞல் ஏற்படுவதில்லே என்பதை மதியுடையவர்கள் நன்கு உணர்ந்துகொள்ளலாம். அருளாளர்களுக்கு அன்றி, மற்றவர்களுக்கு ஆண்டவன் விதித்த விதி நிறைவேறும் வகையில்தான் அவர்களது அறிவும், செயலும் செல்லும் என்பதும் உறுதியாகும்.

மேலும் நமது பூர்வாஸ்ரம தம்பியார் கொழும்பு சுந்தரம்ஸ் லிமிடெட், மானேஜிங் டைரக்டர் ஸ்ரீ K. V. கணபதியாபிள்ளேயவர்கள், திருநெல்வேலி 20, கீழரத வீதியில் வசிக்கும் இரேகை சாஸ்திரி ஸ்ரீ T. S. G. சொக்கலிங்கம் பிள்ளேயிடம் தன்னுடைய கை இரேகைகளேக் காட்டி 1949-ம் வருஷம் எடுத்த அநாகத வேதமெனும் நாடி சாஸ்திர ஏடுகளில் முத்த சகோதர பாவகமாகிய 11-ம் பாவகத்தைப் பார்த்தபொழுது அதில் நம்மைக் குறித்து நான்கு பாடல்கள் கூறப்பெற்றிருக்கின்றன. அப்பாடல்களின் பொழிப்புரையாவது:

(1) தனியாக வாழ்க்கை செலுத்தும் இயல்புள தமையனுல் சேகரித்துள்ள பெருமைக்கு இடமான பொருளும், பிதாவினுல் சேகரித்துள்ள கணக்கற்ற பூமியும், மற்றும் உயரிய தானங்களும், பஞ்சமாதிபன் பூர்வ புண்ணியத் தானத்தில் இருப்பதால் அநிதக் காலமாகிய சனி திசை முடிவில் நன்மை கனியப் பெறூஉம்.

(2) பிற்கால சம்பாத்யமும், தனவந்தனும் சுய சம்பாத்யத்தால் நேரப்பெற்று (நமது பூர்வாச்ரம நிலே) அதன் பிற்காலத்திலும் (நமது துறவு நிலே) சந்தன மரம் போலும், காமவல்லிக் கொடி படரும் கற்பக விருக்ஷம் போலும் புகழுள்ளவன், கற்றறிவுள்ள அறிஞுயும், வாழ்க்கைத் துணே இழந்தோனுயும் உள்ளவனுல் மணம் பெற்று முன்னேற இடமுள்ளது.

(3) இவ்வாறு ஆராய்ந்து எடுத்தாளப்பட்ட தமையன், இருவினேயொப்பு, மலபரிபாகம் உற்ற சத்தினிபாதராயும், பொறுமையுடையவராயும் மனதை அடக்கித் தெய்வ வழிபாடு உடையவராயும், ஆடூஉக் குணம் நான்கில் ஒன்ருகிய கருமம் முடிக்கும் துணிபு உள்ளவரே. பிரமரந்திர ஸ்தானமாகிய சிரசில் சுக்ல மணி திரண்டு லிங்காகாரமாய்ப் பொருந்தி யாவரும் தொழுமாறு அக்னியால் அழியப்பெருது (அக்னியால் உண்ணப்பெருது.)

(4) அதிசயமாயும் புகழாயும் மழை மற்றால் நனையப்பெருவாய்க் கோயில் கொண்டருளும் பாத்திரவான் ஒருவர் உளர். மற்ற உடன் பிறந்தார் யாவரும் பல ஜென்மங்கள் கொண்டுளார்.

நாம் துறவு பூண்டு மதுரை ஆதீனத்தில் பதவி ஏற்ற வருஷம் 1953. ஆனால் மேலே சொல்லப்பெற்ற ஏடு எடுத்த வருஷம் 1949, அப்பொழுது நமக்குத் துறவு பூணவேண்டுமென்ற எண்ணம் ஒரு சிறிதும் இல்லாதிருந்தது. ஆனால் "மேலைத் தவத்தளவேயாகுமாம் தான் பெற்ற செல்வம்" "பதவீ பூர்வ புண்ணியானும்" என்ற ஆன்றோர் வாக்குகளை இவ்வித இரேகை சாஸ்திரங்கள் நிரூபிக்கின்ற காரணத்தால் நாம் பிறக்கு முன்னரேயே ஆண்டவன் போட்டிருக்கிற தீர்ப்பின்படி, துறவு பூண்டு மதுரை ஆதீனத்தின் 291-வது ஆதீன கர்த்தராக ஆட்சி செலுத்திவருகிறோம்.

"வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது" — என்ற

திருக்குறளை நிரூபிப்பதற்கு மேலே கூறிய சான்றுகள் போதுமானவை என்று கருதுகின்றோம்.

இவற்றின் உண்மைகளைச் சென்னை அரசாங்கத்தார் கை இரேகைகள் சம்பந்தமாக சப்தரிஷி நாடியின் பழைய ஏட்டுப் பிரதிகளிலிருந்து பல புத்தகங்கள் வெளி

யிட்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் கந்தர்நாடி, காக்கையர் நாடி, கௌசிகர் நாடி, சிவசிந்தாமணி, அநாகத வேதம் முதலிய பிற இரேகை சாஸ்திரங்களும் இருக்கின்றன. கடவுள் கொடுத்திருக்கும் அவ்விதத் தீர்ப்புக்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமாக இருப்பதற்குக் காரணம் அவரவர் சுப அறிவுகொண்டு முன் பிறவிகளில் செய்த நல்வினை, தீவினைகளில் ஏற்பட்ட வேற்றுமைகளே தவிர கடவுளது பக்ஷபாதமுள்ள செயலால் அல்ல என்பதற்குரிய நிரூபணங்களும், இரேகை சாஸ்திர ஏடுகளில் காணப்பெறுகின்றன. கடவுள் கொடுக்கிற நியாயத் தீர்ப்பில் தவறு ஏதும் இருக்கமுடியாது. ஏனெனில் அவரே நாம் செய்கின்ற செயலைப் பார்த்துப் பதிவு செய்துகொண்டிருக்கிறார். அது எப்படி முடியும் என்று சிலர் கேட்கலாம்

சிற்றறிவும் சிறு ஆற்றலும் உடைய மனிதர்களே ஒருவர் பேசுகின்ற பேச்சுக்களையும், பாடுகின்ற பாட்டுக்களையும் ரேடியோ (Radio) கருவி மூலம் எங்கும் கேட்கவும், அவற்றை ஒலிப்பதிவு செய்து பின்னால் எப்பொழுது வேண்டுமென்றாலும் எந்த இடத்திலும் பிறர் கேட்கும்படி "டேப் ரிக்கார்டர்" (Tape Recorder) கருவி மூலம் செய்யவும் முடிகிறதென்ற உண்மையை யாவரும் அறிவர். அதேபோல ஒருவருடைய உடலின் உருவத்தையும், அசைவையும், தொழிற்பாட்டையும்

17296

(Television) தொலைக்காட்சி கருவி மூலம் தொலைவி லுள்ளவர்கள் கண்டுகொள்ளுமாறு செய்யவும் முடிகிற தென்ற உண்மையையும் யாவரும் அறிவர்.

ஆனால் முற்றறிவும், முடிவில்லாத ஆற்றலும் உடைய கடவுள் நமக்கு "டேப் ரிக்கார்டர்" கருவியை யும், டெலிவிஷன் கருவியையும் ஒன்றுசேர்த்து ஒவ் வொருவரது நெற்றியிலும் அபூர்வமாக அமைத்திருக் கிறார் என்பதைப் பலரும் சிந்தியாதிருக்கிறார்கள். அதனாலேயே ஏதாவது ஒன்றை நினைவிற்குக் கொண்டு வரவேண்டுமானால் புருவங்களை உயர்த்தி நெற்றியை அழுத்துகிறோம். அல்லது கை விரல்களைக்கொண்டோ, கையிலுள்ள எழுது கருவிகளான பென்சில் பேனாக்களைக் கொண்டோ நெற்றியில் அழுத்தியோ, தட்டியோ நினைவை உண்டுபண்ணுகிறோம். அது டேப் ரிக்கார்டர் சுற்றுவது ஏதாவது காரணத்தால் நின்று, பேச்சு நின்றுவிட்டால் அதனைச்சிறிது சரிப்படுத்தி ஓடச்செய்து சப்தத்தைக் கேட்கச் செய்வதுபோலாகும். அவ்வித அபூர்வமான கருவியைக் கருணையுள்ள கடவுள் நமக் குத் தந்து உதவியிருப்பதினாலேயே நாம் 5 வயதுப் பிராயத்திலிருந்து படித்தவற்றையும், பார்த்தவற்றை யும் நினைவுபடுத்திப் பிறருக்குச் சொல்லக்கூடிய பாக்கியம் பெற்றவர்களாக இருக்கிறோம்.

மனிதர்களுக்கு அவ்வித அபூர்வமான கருவிகளைக் கொடுத்திருக்கும் கடவுளுக்கு நாம் எண்ணுவதையும்,

பிரார்த்திப்பதையும், பேசுவதையும், செய்வதையும் பதிவு செய்யக்கூடிய ஆற்றல் நிச்சயமாக உண்டு என்பதை யாவரும் யூகித்து உணர்ந்துகொள்ளல் வேண்டும்.

இறந்துபோன மனிதர்களே அவர்களது சூக்கும சரீரமெனப்படும் ஆவி உடலோடு சாதாரணமானவர்களது கண்களுக்கு தெரியாத நிலையிலிருந்து கொண்டு நாம் பேசுவதைக்கேட்டு, 13 வயதிற்கு மேல்பட்ட மீடியம் (Medium) சக்தி வாய்ந்த சில ஆண்டுகள் பெண்கள் மூலம் பதில் சொல்லவும் படைத்த பதார்த்தங்களின் ருசிகளைச் சொல்லவும், இங்கு நடக்கின்ற காரியங்களைப் பார்த்துச் சொல்லவும், முடிகிறதென்ற உண்மையை, மேல்நாட்டவர்களும் சோதனை செய்து பார்த்துப் பல புத்தகங்கள் வெளியிட்டிருக்கிறார்கள். இறந்த மனிதர்களுக்கே அவ்வித ஆற்றல்கள் இருக்குமானால், கடவுளுக்கும் அவருடைய அதிகாரத்தைப் பெற்று அமுல் நடத்தும் அதிதெய்வங்களுக்கும் நாம் செய்கின்ற அனைத்தையும் ஏன் அறியமுடியாது என்பதைப் பதவியில் உள்ளவர்களும், படித்தவர்களும் முதலில் உணர்ந்து நடந்துகொண்டால்தானே பாமரரும் அந்த உண்மையை உணர்ந்து நடந்து கொள்ளுவார்கள்.

ஆனதால் கடவுள் ஒவ்வொருவருக்கும் கொடுக்கிற நியாயத் தீர்ப்பில் தவறு ஏதும் இருக்கமுடியாது. மனதால், வாக்கால், உடலால், உடைமைகளால் செய்கின்ற, அத்தனையையும் ஆண்டவன் அறியக்கூடிய சாக்ஷியாகவும், தானாகவே (Automatically) பதிவு செய்யக்கூடிய ஆற்றல் உடையவராகவும் இருக்கின்ற காரணத்தால் அவருக்கு வேறு சாக்ஷிகளோ ஜூரிகளோ தேவையில்லை.

3. கடவுள் பக்ஷபாதமற்ற கருணையாளர் என்பதற்கு உதாரணங்கள்:—

இவவுலகத்திலே அரசாங்கப் பதவிகளிலும் மற்ற அலுவலகங்களில் வேலை பார்க்கிறவர்களின் பதவிகளிலும், அதிகாரத்திலும், உயர்வு தாழ்வுகளிலும், சம்பளக் கூடுதல் குறைவுகளிலும், பலதரப்பட்டு ஏற்றத் தாழ்வுடன் இருப்பதை நேரில் காண்கிறோம் அல்லவா? இந்த வேற்றுமைகளுக்குக் காரணம் அவரவரது படிப்பின் வேறுபாடும், அந்தந்த வேலையின் அனுபவத்தின் வேறுபாடுமா? அல்லது உத்தியோகத்தில் அமர்த்துகிறவரது சொந்த விருப்பமா? என்று சிந்தித்து ஆராய்ச்சி செய்து பார்த்தால் அவரவரது தகுதியிலுள்ள வேற்றுமைதான் அவற்றிற்குக் காரணம் என்பது தெளிவாகும்.

அதேபோல ஒரு சிறைச்சாலைக்குள் இருக்கின்றவர்களது காலவேற்றுமைகளுக்கும் உணவு வேற்றுமைகளுக்கும், தொழில் வேற்றுமைகளுக்கும், அவரவர் சிறைச்சாலைக்கு வெளியே சுய அறிவுகொண்டு செய்த குற்றங்களின் ஏற்றத்தாழ்வுதான் காரணமா? அல்லது நியாயாதிபதியின் இஷ்டப்படி அத்தண்டனைகள் ஏற்பட்டனவா? என்று சிந்தித்துப்பார்த்தால், நியாயாதிபதிக்கும், குற்றவாளிகளுக்கும் எவ்வித விரோதமோ, குரோதமோ கிடையாது என்பதும் நியாயாதிபதி, அரசாங்கச் சட்டப்படியே அந்தந்தக் குற்றங்களுக்குக் கொடுக்கவேண்டிய தண்டனைகளையே கொடுத்திருக்கிறார் என்பதும், அவரவர்கள் சிறைச்சாலைக்குள் இருந்து வாழவேண்டிய ஏற்றத்தாழ்வுள்ள நிலைமைகளுக்கு அவரவர் சுய அறிவோடு செய்த குற்றங்களே காரணம் என்பது தெளிவாகும்.

மேலும் பள்ளிக்கூடங்களில் பல வகுப்புக்களில் மாணவர்கள் படிக்கிறார்களே, அவர்கள் அந்தந்த வகுப்பில் சேர்க்கப்பெறுவதற்குக் காரணம் தலைமை ஆசிரியரது இஷ்டமா? அல்லது அந்தந்த மாணவனது படிப்பின் தகுதியா? தேறிய மாணவன் முந்தின வகுப்பிலேயே இருக்க விரும்பினாலும் இருக்கவிடமாட்டார்களல்லவா? அல்லது தேறாத மாணவன் மேல் வகுப்பில் சேர எவ்வளவுதான் விரும்பினாலும் அதில் சேரவிடமாட்

டார்களல்லவா? அதேபோல மாணவர்கள் பெறுகின்ற மதிப்பு எண்களிலுள்ள ஏற்றத்தாழ்வுகளுக்கு, அவரவர் எழுதின விடைகளின் தராதரங்கள் காரணமே தவிர ஆசிரியரது பக்ஷபாதமான செயல் காரணமாகமாட்டா தல்லவா?

இவற்றிலிருந்து மேல் வகுப்பில் இருப்பதும், கீழ் வகுப்பில் இருப்பதும் தேர்வில் கூடுதல் குறைவுள்ள தேர்வு எண் எடுப்பதும் அவரவரது படிப்பின் தகுதியினுல் ஏற்பட்டவையே தவிர தலைமை ஆசிரியரது அல்லது வகுப்பு ஆசிரியரது பக்ஷபாதமான செயல் இல்லை என்பது தெளிவாகும். இந்தப் பேருண்மையை விளக்க, படித்தவர்களும் படியாதவர்களும் தெரிந்துகொள்ளக் கூடிய இன்னும் இரண்டு உதாரணங்கள் கூறுகிறோம்.

ரயிலில் செல்லுகின்ற பிரயாணிகள் ரயில் நிலையத்திற்குள் போகுமுன்னமேயே நுழைவுச் சீட்டு அல்லது டிக்கட் பெற்றுக்கொள்ளவேண்டும். அதில் மூன்ரும் வகுப்பு, இரண்டாம் வகுப்பு, முதலாம் வகுப்பு, குளுகுளு வகுப்பு என்ற "ஏர்கண்டிஷண்டு" வகுப்பு ஆக நான்கு வகுப்புக்கள் இருக்கின்றன. யாரும் எந்த வகுப்பிலும் செல்லக்கூடிய அனுமதிச் சீட்டைப் பெற்றுக்கொள்ளலாம் அல்லவா? ரயில்வே அதிகாரிகள் யாருக்கும், எந்த வகுப்பிற்குரிய அனுமதிச் சீட்டையும் அதற்குரிய பணத்தைப் பெற்றுக்கொண்டு

மனம் உவந்து கொடுக்க மறுப்பதில்லையல்லவா? மூன்ரும் வகுப்பு டிக்கெட் வாங்கிய ஒருவன், மற்ற மேல் வகுப்பு டிக்கெட் வாங்கி வந்து, மேல் வகுப்பு வண்டிகளில் இருக்கப்பட்டவர்களைப் பார்த்து பொருமைப்படவோ, டிக்கெட் கொடுத்த அதிகாரிகளைக் குறை கூறவோ, தான் டிக்கெட் வாங்கிவந்த வகுப்புக்கு மேல் வகுப்பில் இருக்கவேண்டுமென்று விரும்பவோ கூடாதல்லவா? அவ்வாறு பொருமைப்படுவதும், நிர்வாக அதிகாரிகளைக் குறை கூறுவதும் குறைந்த வகுப்பிற்குரிய டிக்கெட்டை வைத்துக்கொண்டு மேல் வகுப்பு வண்டிகளில் பிரயாணம் செய்யவேண்டும் என்று விரும்புவதும் அறிவீனம் என்றுதானே சொல்ல வேண்டும்.

இந்த இருபதாம் நூற்ருண்டிலும் ரயிலில் பிரயாணம் செய்யாதவர்கள் இருந்தாலும் இருக்கலாம். ஆனுல் சினிமாப் பாராதவர்கள் இருக்கமுடியாது. சினிமாப் படம் காட்டுகின்ற இடத்தின் வாசலுக்கு வெளியே உள்ள வாசலில் டிக்கெட் வாங்கிக்கொண்டு தானே உள்ளே போகவேண்டும். யாரும் எந்த வகுப்பிற்குரிய டிக்கெட்டும் வாங்கலாம் தானே. சினிமா நடத்துகிறவர் தன்னிடமுள்ள ரிசர்வ் நாற்காலி முழுவதிலும் ஆட்கள் வந்து உட்கார்ந்திருந்தால் சந்தோஷப் படுவாரே தவிர வருத்தப்படமாட்டாரல்லவா? தரை டிக்கெட் வாங்கிய ஒருவன் ரிசர்வ் நாற்காலியில்

அதற்குரிய டிக்கெட் வாங்கியிருப்பவரைப் பார்த்தும் பொறுமைப்படவோ சினிமா நடத்துகிறவரைக் குறை கூறவோ, மேல் வகுப்பு இடங்களில் உட்கார விரும்பு வதோ கூடாதல்லவா?

மேலே சொல்லியிருக்கும் ஒவ்வொரு உதாரணத் திலும், அரசாங்கத்தில் பலவித உத்தியோகங்களுக்கும், சிறைச்சாலைகளில் பலவிதத் தண்டனைகளுக்கும், பள்ளிக்கூடங்களில் பலவித மதிப்பு எண்கள் எடுப்ப தற்கும், பலவித வகுப்புகளில் உட்காருவதற்கும் அனுமதிபெறவேண்டிய இடம் வெளியிலும் அந்த அனுமதிப்படி செல்லவேண்டிய இடங்கள் அது அதற்குரிய கட்டுப்பாடு உடையனவாகவும், தனித் தனியாகவும் தானே இருக்கின்றன. இத்தனை வேறு பாடுகளும் அவரவரது தகுதியைப் பொறுத்து உத்தி யோகங்களும் அவரவரது குற்றங்களைப் பொறுத்து தண்டனைகளும் அவரவரது படிப்புக்குத் தக்க வகுப் புக்களில் எடுக்கிற மதிப்பு எண்களும், தேர்வுகளுக்கும், தோல்விகளுக்கும் தகுந்தபடி பள்ளிகளில் மேல் கீழ் வகுப்புக்களும் அவரவர் வாங்கி வந்த டிக்கெட்டு களைப் பொறுத்து ரயில் வண்டிகளிலும், சினிமாக் கொட்டகைகளிலும், மேல் வகுப்பும் கீழ் வகுப்பும் அமைந்தனவே தவிர அதனை நடத்துகிறவர்களோ அல்லது அனுமதி கொடுக்கின்றவர்களோ, அந்த ஏற்றத்தாழ்வுகளுக்கும், வேற்றுமைகளுக்கும் காரண

கர்த்தாக்கள் இல்லை அல்லவா? அவரவர் இருக்கிற நிலைமைகளுக்கு அவரவரது முந்திய செயல்களே காரணமாக அமைவதால் அவரவர்கள் பலதரப்பட்ட நிலைமைகளில் வாழ்ந்து வரவேண்டியதற்கு அவரவர்களே காரண கர்த்தாக்களாக இருக்கிறார்கள் என்பது தெளிவாகும்.

இவற்றைக்கொண்டு மதிநுட்பம் உடையவர்கள் வந்த இடமாகிய இப்பூலகில் காணப்படுகிற வேற்றுமைகளுக்கும் ஏற்றத்தாழ்வுகளுக்கும், நாம் நமது சுய அறிவினால் முன் பிறவியில் செய்த நல்வினை தீவினைகளுக்குத் தகுந்த கருணையுள்ள பக்ஷபாதமற்ற கடவுளால் கொடுக்கப்பெற்ற நியாயத் தீர்ப்புக்களே காரணம் என்பதை யூகித்து உணர்ந்துகொள்ளவேண்டும். அதோடு அவ்விதத் தீர்ப்புக் கொடுத்த கடவுள் பேரில் யாதொரு குறையும் கிடையாது என்பதையும் அவரவர்கள் பெற்றுவந்த தீர்ப்புக்களுக்கு அவரவரது முந்தின செயல்கள்தான் உண்மையான காரணம் என்று உணர்ந்துகொள்ளவேண்டும்.

4. பேசும் மொழிகள் வெவ்வேறாக இருந்தாலும் உலக மக்கள் அனைவருக்கும் உள்ள உணர்ச்சி ஒன்றேயாகும்.

உலகத்தில் இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட மொழிகள் இருப்பதாகச் சொல்லுகிறுர்கள். எத்தனை இருந்தாலும் எல்லோருக்கும் உணர்ச்சி ஒன்ருகவே இருக்கிறது அல்லவா? கற்கண்டை எந்த மொழி பேசுகிறவரது வாயில் போட்டாலும் இனிப்பு உணர்ச்சி என்பது எல்லோருக்கும் ஒன்றுபோலத்தானே இருக்கும். வித்தியாசமாக இருக்காதல்லவா? ஆனுல் பிறரால் தெரிந்துகொள்ளமுடியாத அந்த ருசி உணர்ச்சியைப் பிறர் அறியச் சொல்லுகின்ற மொழிகள் எல்லாம் ஒன்றுக்கொன்று வித்தியாசமாகத்தானே இருக்கும். கடவுள் கொடுத்த தோல், நாக்கு, மூக்கு, கண், காது இவற்ருல் தமிழ் பேசுகிற ஒருவர் பெறுகின்ற உணர்ச்சியைத்தான் உலகிலுள்ள அத்தனை மொழியாளர்களும் பெறுகிருர்கள். ஆதலால் பேசுகிற தாய்மொழியும், பிறக்கவேண்டிய இடமும், வெவ்வேருக இருந்தாலும் உலகிலுள்ள அனைவரும் பெறுகின்ற உணர்ச்சியும் அனுபவமும் ஒன்ருகவே இருக்கின்றன. அவ்வாறு கடவுளே செய்திருக்கிருர் என்ற அரிய பெரிய உண்மையை யாரும் மறுக்கமுடியாது.

5. கடவுளே எல்லா மக்களுக்கும பிதாவாகின்ருர். உலகமக்கள் அனைவரும் அவரது குழந்தைகளே. உலகம் முழுவதும் எல்லோருக்கும் சொந்த சொத்தே ஆகும்.

உலகிலுள்ள அனைவருக்கும் உடல் கொடுத்தவர் கடவுள் ஒருவரே. அவரே எல்லோருக்கும் தந்தையும், தாயுமாகிறார். எனவே யார் எங்கு பிறந்தாலும், எந்த மொழி பேசினாலும் மக்கள் அனைவரும், உண்மையில் சகோதர சகோதரிகளே ஆகிறார்கள். இந்த மாபெரும் உண்மையை உணர்ந்துகொள்ளும் அறிவுடைய யாவரும், மொழிச் சண்டையோ, பிராந்தியச் சண்டையோ, தேசச் சண்டையோ, போட்டுக்கொள்ளமாட்டார்கள். உலகம் முழுவதுமே கடவுளது உடைமையாக இருக்கும்பொழுது, அவருடைய குழந்தைகளாகிய நமக்கு உலகமே ஒரு பொதுச்சொத்தமாக அமைகிறது. உண்மை அவ்வாறிருக்க சுயநலப்பித்துக் கொண்டவர்கள் அறியாமையாள் யாரும் எங்கும் செல்லவும் குடியேறவும் தடை உத்தரவுகள் பிறப்பித்துக்கொண்டு உலக மக்களது உரிமையையும் ஒற்றுமையையும் பாழ்படுத்துகின்றனர். இன்று இலங்கையில் ஆட்சி செலுத்தும் சிங்களவர்களாக இருக்கப்பட்டவர்கள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் இந்தியாவில் வங்காளத்திலிருந்து படகில் சென்று குடியேறியவர்களின் சந்ததிகளேயாவார்கள். இன்று ஆஸ்திரேலியாவிலும், தென் ஆப்பிரிக்காவிலும் ஆட்சி செலுத்தும் ஆங்கிலேயர்கள் இங்கிலாந்திலிருந்து அங்கு குடியேறியவர்களின் சந்ததிகளேயாவார்கள். இன்று, அமெரிக்காவில் ஆட்சி செலுத்தும் அனைவரும் ஐரோப்பாக் கண்டத்தில் உள்ள பல நாடுகளிலிருந்தும்

குடியேறியவர்களின் சந்ததிகளே ஆவார்கள். இவர்களெல்லாம் குடியேறுமுன் அந்தந்த நாட்டில் வாழ்ந்து வந்த மக்களுக்குக் கொடுக்கவேண்டிய உரிமைகளைக் கொடாதிருப்பதற்கும், அவர்களது முன்னோர்கள் யாதொரு தட்டுத்தடையின்றி குடியேறினதுபோல் இன்றும் யாரும் வந்து குடியேறலாம் என்று சொல்லாமல், தடைகள் செய்வதற்கும் மூலகாரணம் சுயநலப் பித்தேயாகும்.

6. கடவுளைப்பற்றியும், உயிர்களைப்பற்றியும் உள்ள ஆராய்ச்சியில் இந்தியாவே தலைசிறந்தது

கடவுளைப்பற்றியும், உயிர்களைப்பற்றியும், கடவுளுக்கும், உயிர்களுக்குமுள்ள உண்மையான உறவு, தொடர்பு முதலியனபற்றியும் பிறநாடுகளைவிட இந்தியாவே அதிக ஆராய்ச்சி செய்து, கடவுளிடத்தில் அதிக பக்தியும், பயமும் உடையதாக இருக்கிறது. இந்தியாவிலுள்ள 14 விதமான மொழிகள் பேசுகின்றவர்களும் இந்துக்களாகவே இருந்தும், கடவுள் பக்தியிலும், பண்பாட்டிலும் அவர்கள் தலைசிறந்தவர்களாக இருந்தும், அவர்களுக்குள்ளேயே எல்லைச் சண்டைகளும், மொழிச் சண்டைகளும் இருக்கலாமா? இருக்கவே கூடாது.

7. தமிழ்நாட்டிலுள்ள தனிச்சிறப்பு:

அதிலும் கடவுள் சம்பந்தமாகவும், உயிர்கள் சம்பந்தமாகவும், உலகத்திலேயுள்ள பேசும் மொழிகள்

அனைத்திலும் இல்லாத அளவுக்கு ஒழுக்க நூல்களும் சாஸ்திரங்களும், தோத்திரங்களும் தமிழிலேதான் இருக்கின்றன. ஒழுக்க நூல்களுள் 1330 திருக்குறள் கள், சாஸ்திரங்களுள் 14 சித்தாந்த சாஸ்திரங்கள், தோத்திரங்களுள், தேவாரம், திருவாசகம், திவ்யப்ர பந்தம் ஆகிய இவற்றிற்கு ஒப்பாக வேறு எந்த மொழி களிலும் கிடையாது. இன்றைய விஞ்ஞானிகள் வியக் கத்தக்கதாக கோயில்களும், கோபுரங்களும் விமானங் களும் தமிழ்நாட்டிலே இருப்பதுபோல உலகத்தில் வேறு எந்த நாட்டிலும் கிடையாது. தமிழ் நாட்டு ஆலயங்களிலும், தமிழர் கொண்டாடும் பிறநாட்டு ஆலயங்களிலும் ஆகம முறைப்படி நடக்கின்ற பூஜை, அபிஷேகம், அர்ச்சனை, அலங்காரம், உபசாரம், நைவேத்தியம், உத்சவாதிகள், எழுத்திருத்துக்கள் முதலியன வேறு எந்நாட்டிலும் கிடையாது. தமிழ்ப் பாடல்கள் பாடி, கடவுளது திருவருள் துணைகொண்டு, தமிழ்நாட்டு சமய ஆச்சாரியர்கள் செய்த அற்புதங்கள் போல, உலகில் வேறு எங்கும், யாரும் அவ்வளவு அரிய பெரிய அற்புதங்கள் செய்ததில்லை. இதன் விளக்கத்தை "அற்புதச் செயல்கள்" என்ற நூலில் கண்டு மகிழ்க. தமிழ் நாட்டிலுள்ள அருளாளர்கள் "வையகமும் துயர் தீர்கவே" என்றும், "வாழ்க இப் புவனமெல்லாம்" என்றும் பாடினர்களே தவிர, தமிழ் நாடுமட்டும் துயர்தீர்க என்றோ, வாழ்க தமிழ்நாடு மட்டும் அல்லது வாழ்க இந்தியா மட்டும் என்றோ பாட

வில்லை. அந்தப் பரம்பரையைச் சேர்ந்த தமிழ்நாட்டில் மொழிப் பிரச்சினையும், பிராந்தியப் பிரச்சினையும், பிற சுயநலப் பிரச்சினைகளும், தலைகாட்ட இடம் கொடுக்கவே கூடாது. தமிழ்ப் பண்பாடு உடைய தமிழர்கள் தமிழ் வாழ்க என்று எண்ணவும், சொல்லவும், பிரார்த்திக்கவும் செய்யலாமே தவிர பிறமொழி எதுவும் ஒழிக என்று எண்ணவோ, சொல்லவோ, பிரார்த்திக்கவோ கூடாது.

8. அந்நியர் போற்றும் தமிழும், தமிழ் மக்களின் பண்பாடும் :

மதிப்பிற்குரிய ஜி. யு. போப், கால்டுவெல் போன்ற அந்நியர்கள், தமிழைக் கற்றதன் பயனாக, தமிழ் நூல்களுக்குக் கொடுக்கவேண்டிய மதிப்பைக் கொடுத்து தமிழர்களது மதி நுட்பத்தையும், பக்தியையும், பண்பாட்டையும், வெகுவாகப் பாராட்டியிருக்கிறார்கள். அதுபோலத் தமிழ் நூல்களின் சிறப்பையும், தமிழனது மதி நுட்பத்தையும், பக்தியையும், பண்பாட்டையும் நம் இந்தியாவிலுள்ள பிறமொழியாளர்களும், அந்நிய நாட்டு பல்வேறு மொழியாளர்களும் பாராட்டும்படி தமிழர்கள் செய்யவேண்டும். அதற்கு நம்முடைய ஒழுக்க நூல்களும், சாஸ்திரங்களும், தோத்திரங்களும், உலகிலுள்ள முக்கிய மொழிகள் அனைத்திலும் முதலாவது மொழி பெயர்க்கப்பெறல் வேண்டும்.

இந்த வேலையைத் தமிழ்நாட்டை ஆளும் ஆட்சியாளர்கள் செய்யவேண்டும். பிறமொழிகளிலும், பிறமொழி பேசுகின்றவர்களிடமும் வெறுப்பு உணர்ச்சி யாதொன்றும் இன்றி நட்பு உணர்ச்சியும், விருப்பு உணர்ச்சியுமே இருக்கிறதென்பதைத் தமிழர்கள் நடைமுறையில் செய்துகாட்டல் வேண்டும். "சொல்லுதல் யார்க்கும் எளிதாம், அரியவாம் சொல்லிய வண்ணம் செயல்" என்ற பொய்யா மொழிப்படி, பேச்சில் ஆரவாரத்தைக் குறைத்து, தமிழின் பெருமையையும், தமிழ் நூல்களின் அருமையையும், தமிழனது பண்பாட்டையும் செயலில் உலகம் கண்டு மதிக்கத்தக்கதாக தமிழ் நாட்டு மக்கள் நடந்துகொள்ளவேண்டும்.

9. உலக சமாதானத்திற்கு, இந்தியா வழிகாட்டியாகத் திகழ யாது செய்தல் வேண்டும்?

முன் பிறவியையும், மறு பிறவியையும் ஒப்புக்கொண்டு திகழ்கின்ற மதங்கள், இந்து மதமும், பௌத்த மதமும் ஆகும். யாரும் எங்கும் பிறக்கும்படியாக ஏற்படலாம் என்பது, இந்துமக்களும், பௌத்த மக்களும் ஒப்புக்கொண்டு உண்மையாகும். அல்லாமலும் பௌத்த மதம் இந்து மதத்தின் ஒரு பிரிவேயாகும். இந்து மதம் தாயும், பௌத்த மதம் சேயும் போன்றவை. ஆதலால் இந்து மதக் கோட்பாடுகளை அனுதியாகவே கொண்டுள்ள இந்தியாதான் உலகிற்கே "ஒன்றே குலமும், ஒருவனே தேவனும்" என்ற உண்

மையையும், உலகத்திலுள்ள எல்லா நாடுகளும் உலக மக்கள் எல்லோருக்கும் சொந்தம் என்ற உண்மையை யும் கூறுவதோடு அமைந்துவிடாமல், அதை நடை முறையில் அமுலுக்குக் கொண்டுவரவும் வேண்டும். யாரும் இந்தியாவில் வந்து குடியேறலாம். இந்தியா வைத் தன்னுடைய நாடாக ஏற்றுக்கொள்ளலாம். அவரவர்கள் பாடுபட்டு உழைத்து பொருள்தேடி வாழ்ந்துகொள்ளலாம், என்ற ஒரு அறிக்கையை இந்தியா உலகிற்கு விடவேண்டும். அதை ஒரு பிரேரணையாகப் பாராளுமன்றத்திற்குக் கொண்டுவந்து அதனை நிறைவேற்ற வேண்டும். அதற்கு இந்திய ஜனாதிபதியும் இந்திய பிரதமரும் வேண்டிய முயற்சி கள் எடுத்துக்கொள்ளவேண்டும். இதே பிரேரணையை யுனைடெட் நேஷன்ஸ் ஆர்கனைசேஷன் (United Nations Organization) ஐக்கிய நாட்டுச் சங்கத்தில் நிறைவேற்ற இந்தியா சகல முயற்சிகளும் எடுத்துக் கொள்ளவேண்டும். அதுவே இந்தியா உலக நாடுகள் அனைத்தையும் "ஒன்றே குலமும், ஒருவனே தேவனும்" என்ற உண்மையை உணரவும், பேசவும், செயல்படவும் தூண்டுகின்ற முதற் செயலாகும்.

10. உலக சமாதானத்திற்கு ஐக்கிய நாட்டுச் சங்கம் யாது செய்தல் வேண்டும்.

இந்து மதத்தில் உள்ள அருளாளர்கள், கடவுளை, "அம்மையே அப்பா" என்றும், "அப்பன் நீ அம்மை நீ" என்றும், 'ஈன்றாளுமாய் எனக்கு எந்தையுமாய்"

என்றும், "எந்தையாய் எம்பிரான் மற்றும் யாவர்க்கும் தந்தை தாய் தம்பிரான்" என்றும் கடவுளை அம்மை யப்பனுகவும், உலக மக்கள் அனைவரையும், அவரது குழந்தைகளாகவும் கூறியிருக்கின்றனர். இயேசுநாதர் பரமண்டலத்திலே இருக்கிற தேவனே எல்லோருக்கும் பிதா என்றும், உலகத்திலுள்ள மக்களெல்லாம் அவருடைய குழந்தைகள் என்றும் சொன்னுரே தவிர, தன்னைமட்டும் அவரது குழந்தை என்று சொல்லவில்லை நபிநாயகமும் உலக மக்கள் அனைவரும் சகோதர சகோதரிகளே என்றும், அல்லாஹுத்தாலா ஒருவரே எல்லோருக்கும் உடல் கொடுத்த பிதா என்றுமே போதித்திருக்கிருர். மனிதர்களுடைய தாகத்தைத் தனிக்கக்கூடிய ஒன்றைக் கடவுள் கொடுத்திருக்கிருர். அதனைத் தமிழர் தண்ணீர் என்று சொல்லுகிருர்கள். தெலுங்கில் நீளு என்றும், மலையாளத்தில் வெள்ளம் என்றும், இந்தியில் பானி என்றும், சிங்களத்தில் வத்ரு என்றும், ஆங்கிலங்த்தில் வாட்டர் என்றும், பிற மொழிகளில் வெவ்வேறு விதமாகவும் சொல்லும்பொழுது, எல்லோருக்கும் பிதாவாகிய கடவுளுக்கும், ஒவ்வொரு மொழியிலும், ஒவ்வொரு பெயர் இருக்கலாம் என்பதை அறிவுடைய எவரும் உய்த்துணர்ந்துகொள்ளலாம். தென்னுடாகிய தமிழ் நாட்டில் கடவுள் வழிபாடு செய்த மாணிக்கவாசகர், கடவுளை சிவன் என்று சொன்னதோடு நின்றுவிடாமல், அவரையே எந்நாட்டவரும் இறைவன் என்கிருர்கள்

என்பதனை வலியுறுத்தி தென்னாடுடைய சிவனே போற்றி, எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி என்று கூறியிருக்கிறார். அவர் கடவுளுடைய பல நாமங்களைப் பற்றி ஒரு நாமம் ஓருருவம் ஒன்றும் இல்லாருக்கு (கடவுளுக்கு) ஆயிரம் திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் (தம்பட்டம்) கொட்டாமோ என்றும் அருளியிருக்கிறார்.

ஆனதால் இந்துக்களும், கிறிஸ்தவர்களும், முகம்மதியர்களும், மற்றுமுள்ளோர்களும், உலக மக்கள் யாவரும கடவுளுடைய குழந்தைகள் என்பதையும், ஒருவருக்கொருவர் சகோதர சகோதரிகள் என்பதையும் ஆராய்ந்து உணர்ந்து, சுயநலங்களை விட்டுக் கொடுத்து, உலகத்திலுள்ள எந்தப்பகுதிக்கும், யாரும் தட்டுத்தடங்கலின்றி செல்லவும், எந்த நாட்டையும் தனது நாடாகக் கருதிக் குடியேறவும், எங்குள்ள விளைபொருள்களும் எல்லா நாடுகளுக்கும், யாதொரு தடையுமின்றிச் செல்லவும், வழிவகைகள் ஐக்கிய நாட்டுச் சங்கம் மூலமாகச் செய்தல் வேண்டும். அன்றுதான் உலகப் பூசல்களும், யுத்த பயமும் நீங்கி உலக மக்கள் நிலைத்த சமாதானத்தையும், சாந்தியையும் பெற்றுத் திகழ்வார்கள்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

TAMIL NADU ARCHIVES LIBRARY

அவற்றிற்கு கடவுள் பொறுப்பும் இல்லை. பொதுவாக, அறிவைப் பொறுத்துத்தான் ஒருவனுக்கு ஒன்றில் விருப்போ, ஒன்றில் வெறுப்போ ஏற்படக்கூடியதாக இருக்கிறது. விருப்பு வெறுப்பைப் பொறுத்தே ஒருவருக்கு குணங்கள் அமைகின்றன. ஒருவரது அறிவையும், விருப்பு, வெறுப்புக்களையும், குணங்களையும் இன்னொருவர் அறியமுடியாது. ஆனால் அவர்கள் செயல்களிலிருந்து அவர்களது குணம், இச்சை, அறிவு முதலியவற்றை யூகித்து அறிந்துகொள்ளலாம். எல்லா மனிதர்களுக்கும் ஒன்றுபோல்தான் அவயவங்களை கடவுள் கொடுத்திருக்கிறார். என்றாலும் அவர்களின் செயல்கள் வேறுபட்டிருக்கின்றன. அவர்களது செயல்களின் வேறுபாட்டைக்கொண்டு அவர்களின் குணமும், இச்சையும், அறிவும் வேறுபாடு உடையனவாகத்தான் இருக்கவேண்டும் என்பதை அறிவுடையவர்கள் யூகித்து உணர்ந்துகொள்ளலாம். ஆனதால் உயிர்கள் ஆதியிலேயே பலதரப்பட்டன என்பதையும், அஞ்ஞானம் உடையன என்பதையும், அறிவிக்க அறியும் தன்மையன என்பதையும், யூகித்து உணர்ந்துகொள்ளல் வேண்டும். கடவுள் என்று உண்டோ அன்றே உயிர்களும் உண்டு.

இதனை வலியுறுத்தியே தாயுமான சுவாமிகள் "என்று நீ அன்று நான் உன் அடிமையல்லவோ" என்று அருளியிருக்கிறார்; திருமூலரும்,

> "பதி, பசு, பாசம் எனப்பகர் மூன்றில்
> பதியினைப்போல் பசு, பாசம் அனாதி
> பதியினைச் சென்றணுகாப் பசுபாசம்
> பதியணுகிற் பசு பாசம் நில்லாவே"

என்று அருளியிருக்கிறார்.

(பதி-கடவுள், பசு-உயிர், பாசம்-அஞ்ஞானம்)

6A
1-83

4. உயிர்களைக் கருணையுள்ள கடவுள் படைத்திருந்தால் அவர் எல்லோரையும் ஒரே தன்மையாகப் படைத்திருக்க வேண்டும். உயிர்களின் தன்மைகள் பலதரப்பட்டிருப்பதை அவற்றின் தொழிற்பாட்டிலிருந்து உணர்கிறோம். கடவுள் உயிர்களின் தன்மைக்குத் தகுந்த உடல்களையே கொடுக்கிறார். நாம் வாழ்வதற்கு இன்றியமையாத உடல்களையும், உலகத்தையும், சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், கிரகங்கள், மழை, நெருப்பு, காற்று, ஆகாயம் முதலியவற்றையும் மனிதர்கள் உண்டாக்கவில்லை. அவைகளும் ஒரு முறைப்படித் தொழிற்படக் காண்கிறோம். அவற்றை அந்த முறையில் இயக்குவதும் கடவுள் தான். கடவுளுக்கு அளவிறந்த ஆற்றலும் அறிவும் இருக்கிறதை இவற்றிலிருந்து உய்த்து உணரலாகும்.

5. நமக்கு உடல்களைத் கொடுத்து, நமக்காக உலகத்தையும் படைத்து நம்முடைய அறிவையும் வளர்த்து வருகின்ற கடவுளுக்கு நாம் நன்றி கூறவும் அவரிடத்தில் பாவமன்னிப்புக் கோரவும் நல்வாழ்வு பெறவும் அவரைப் பூசித்து புகழ்ந்து பாடி பிரார்த்திக்க வேண்டியது அவசியமாகின்றது. அவருடைய திருவருளைப் பெற்று நாம் உய்யவேண்டிய நெறியை இவ்வுடல் உள்ளபோதே இன்றே தொடங்க வேண்டும். இவற்றின் முழு விபரங்களை "கடவுளுக்கும் உயிர்களுக்கும் உள்ள தன்மைகளும் உண்மையான உறவும்' என்ற நூலில் கண்டு மகிழ்க.

சி. வி. என். பிரஸ், மதுரை:—71.